# இந்திப் போர்

## இந்து தியாலஜிக்கல் ஹைஸ்கூல்முன் மறியல்.

## தமிழர்களே இதற்கு உங்கள் பதில் என்ன?

சென்னை, ஜூலை 1.

சென்னை தங்கசாலைத்தெரு இந்துதியாலஜிக்கல் ஹைஸ்கூல் முன் மறியல்செய்த 4-வது சர்வாதிகாரி தோழர் கோபி ஜி. எஸ். ராஜு, ராஜபாளையம் எல். பால்சாமி, சேலம் வி. எஸ். ராஜு, ஹளூர் மல்லங் சாயபு, ஹளூர் எச். எ. அண்ணாமலை ஆகிய ஐந்துபேரும் இன்று போலீசாரால் கைது செய்யப் பட்டார்கள்.

முதன்மந்திரி வீட்டுமுன் மறியல் செய்த ராஜபாளையம் கே. பொன்னய்யாவும், எ. பி. ராமநாதனும் கைதி ஆனார்கள்.

தமிழ் மக்களே இதற்கு உங்கள் பதில் என்ன? பயந்து ஓடுவதா? எஸ். கே. சாமி சர்வாதிகாரி.